உ



Library

# சிவராத்திரி விரத மான்மியம்

பண்டிதர்

ம. வே. திருஞானசம்பந்தன்

(1954)

வெளியீடு:

*12-03-2002 செவ்வாய் மகா சிவராத்திரி நாள்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

1954ம் ஆண்டு பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தன் எழுதிய சிவராத்திரி விரதமான்மியம் எனும் நூல் என் வீட்டில் இருந்தது. இதை வெளியிட வேண்டுமென்ற நீண்டகால விருப்பம், திருவருள் வசத்தால் கைகூடியுள்ளது. இந்நல்நோக்கம் நிறைவேற எதுவித லாப நோக்கமுமின்றி அச்சிட்டு உதவிய பாரதி பதிப்பகத்தினருக்கு என் உளம் கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும். சைவ மக்கள் இதைப் பேணிப்பாதுகாத்துப் பயன் பெறுவார்களாக.

"மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெலாம்"

அன்பன்
சி. சபாநாதன்
சங்கரத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சிவராத்திரிவிரத மான்மியம்

''மைக்களமும் மான்மழுவும் வரதமுட னபயமுறு
மெய்க்கரமும்நாற்புயமும் விளங்குபணிக்கொடும்பூணும்
செக்கருறு மதிச்சடையுஞ் சேயிழையோர் பாகமுமாய்
முக்கணிறை யாங்காண முன்னின்றே யருள்புரிந்தான்''

— கந்தபுராணம்.

## உற்பவம்:

சிவபெருமானைக் குறித்து அநுஷ்டிக்கப்படும் விரதங்களுட் சிவராத்திரி விரதமே சிறந்ததாகும். ஒரு கற்பாந்தப் பிரளயகாலத்தில் ஆன்மாக்களெல்லாம் ஒடுங்கிப் பேரிருளுண்டாக, அந்த இரவின் நான்கு யாமமும் உலகமாதாவாகிய உமாதேவியார் சிவலிங்கப் பெருமானைப் பூசித்து அப்பெரிய அந்தகாரத்தை நீக்கவே, பழமை போலச் சிருஷ்டித் தொழில் ஆரம்பித்தது; உமாதேவியார் சிவபெருமானை வணங்கி, ''சுவாமீ, யான் தேவரீரைப் பூசித்த காலமாகிய இந்த இரவு சிவராத்திரி யென்று சொல்லப்படுகின்றது. இச் சிவராத்திரியில் நான்கு யாமங்களிலும் தேவரீரைப் பத்தியுடன் பூசித்தவர் சாயுச்சிய பதவியையடையும்படி தேவரீர் திருவருள் புரிதல் வேண்டும்'' என்று பிரார்த்திக்க, சிவபிரானும் '', அங்ஙனம் ஆகுக'' எனத் திருவாய் மலர்ந்தருளினர்.

இச் சிவராத்திரியின் உற்பவ காரணம் இன்னுமொன்றுளது. ஒரு கற்பாந்தத்தில் திருமால் பாற்கடலில் அறிதுயில் அமரும் போது, பிரமதேவர் அவரை அடைந்து ''நீ யார்'' என்று வினவ, விட்டுணுவும் ''நீ யார்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பிரமாவை வினவ, அதற்குப் பிரமா ''யானே சிருஷ்டித் தொழிலைச்செய்யும் பரப்பிரம'' மெனலும், திருமால் புன்னகைசெய்து, 'எனது நாபிக்கமலத்தில் உன்னைத் தோற்றுவித்து, சகல உலகங்களையும் யான் காத்தலினாலே, யானே ''பரம்பொரு'' ளெனலும், அவ்விருவருக்குமிடையே பேரமர் தொடங்கியது. இருவரும் ஒருவரோ டொருவர் மாறுபட்டு நெடுங்காலமாக யுத்தஞ்செய்ய, அவ்விருவருக்கு மிடையே பரமபதியாகிய சிவபிரான் கனற்பிழம்பாகத் தோன்றி, ''ஏ, அரி பிரமர்களே! உங்கள் இருவருள் எவர் இக் கனற் பிழம்பின் அடியையும் முடியையுந் தேடிக் காண்பரோ, அவரே பரம்பொருள்'' எனத் திருவாய்மலர்ந்தருளுதலும், விட்டுணு பன்றி வடிவமாகித் தம் கொம்பினாற் பூமியைக் கீண்டும், பிரமா அன்னவடிவமாகி மேலே பறந்தும் முறையே அக் கனற்பிழம்பின் அடியையும் முடியையுந் தேடிச் செல்வாராயினர்.

அரிபிரமர் இங்ஙனம் பல்லாயிர வருஷங்களாகத் தேடியும் அடிமுடிகாண முடியாதவர்களாய் மீண்டனர். மாசி மாதத்தில் வரும் கிருஷ்ணபக்கச்சதுர்த்தசியில் நடுராத்திரியில், கருணையங்கடலாகிய சிவபெருமான் தமது சோதிப்பிழம்பாகிய வடிவைக் கரந்து சிவலிங்கத் திருமேனியைக் கொண்டருளினார். அந்தக்காலமே இலிங்கோற்பவ காலமாகும். அந்தச்சமயத்தில் விஷ்ணுவும் பிரமாவும் தங்கள் அகந்தை குன்றப்பெற்றவராய் வந்து சிவலிங்கப் பெருமானைப்பூசித்து, ''மெய்யடியாருள்ளக் கமலத்தில் எக்காலத்துங் கோயில்கொண்டருளிய சுவாமீ! அறியாமையினால் யாமிருவேமுந் தேவரீருடைய அடிமுடிகளைக் காணமுயன்று மிகவும் அலைந்தேம்; இந்தச் சமயத்தில், தேவரீரது சிவலிங்கத் திருமேனியைத் தரிசித்தற்கு நாங்கள் செய்த மாதவம் யாதென அறிந்திலேம்! தேவரீரை நாங்கள் பூசித்த இவ்விரவு சிவராத்திரியென வழங்கவும், சிவராத்திரியிலே தேவரீரைப் பூசிப்போர் முத்தியடையவுந் திருவருள் புரிதல்வேண்டும்'' என இரந்தனர். பரமபதியும் அவர்களுக்கு அவ்வரத்தை ஈந்தருளினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவராத்திரி விரத வகை

நித்திய சிவராத்திரி, மாச சிவராத்திரி, யோக சிவ ராத்திரி அல்லது சோமவார சிவராத்திரி, பக்ஷ சிவராத் திரி, மகா சிவராத்திரி எனச்சிவராத்திரி ஐந்துவகைப் படும். மாசந்தோறும் அபரபக்கம் பூர்வபக்கம் என்னும் இரு பக்கங்களிலும் நிகழும் சதுர்த்தசி நித்திய சிவராத் திரியாகும். மாசந்தோறும் அபரபக்கத்தில் வருஞ் சதுர்த் தசியில் மாத்திரம் அநுட்டித்தல் மாச சிவராத்திரியாகும். சோமவாரத்தில் அமாவாசையும் நிகழுமாயின் அது சோமவார சிவராத்திரியெனவும் யோக சிவராத்திரி எனவும் சொல்லப்படும். தைமாசத்து அபரபக்கப் பிர தமை தொடக்கம் திரியோதசி வரையுமுள்ள பதின்மூன்று நாட்களிலும் ஒருவேளை உணவருந்தி, சதுர்த்தசி யன்று உபவாசமிருந்து, அடுத்த தினம் பாரணஞ் செய்து அநுஷ்டிக்கப்படுவது பக்ஷ சிவராத்திரியாகும். மாசி மாசத் துக் கிருஷ்ணபக்கச் சதுர்த்தசியிலே அநுஷ்டிக்கப்படுவது மகா சிவராத்திரியாகும்.

## அனுஷ்டிக்கும் முறை

சிவராத்திரியில் உபவாசஞ்செய்து நான்கு யாமமும் நித்திரையின்றிச் சிவபூசை செய்தல் வேண்டும். நான்கு யாம பூசையையும் அவ்வக்காலத்திற் செய்வது உத்தமம்; ஒரு காலத்திற் சேர்த்துச் செய்வது மத்திமம். பரார்த்தம் ஆன்மார்த்தம் என்னும் இரண்டினும் சிவராத்திரி நான்கு யாம பூசையிலே சூரியதேவர் முதலிய பரிவாரங்களுக்குஞ் சோமாஸ்கந்தமூர்த்தி முதலிய மூர்த்திகளுக்கும், பூசை செய்யவேண்டியதில்லை. பரார்த்தத்திலே மகாலிங்கம் முதலிய மூலமூர்த்திகளுக்கும், ஆன்மார்த்தத்திலே மகா லிங்கத்துக்கும் மாத்திரப் பூசை செய்யக்கடவர். பரார்த் தம் ஆன்மார்த்தம் என்னும் இரண்டினும் விநாயகக் கடவுளுக்கு மாத்திரம் நான்கு யாமமும் பூசை செய்ய லாம். சண்டேசுரபூசை நான்கு யாமமுஞ் செய்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். சிவபூசை யில்லாதவர் நித்திரையின்றி, ஸ்ரீ பஞ்சாக்ஷரசெபமுஞ் சிவபுராண சிரவணமுஞ் செய்து, நான்கு யாமமுஞ் சிவாலய தரிசனம் பண்ணல் வேண்டும். இதில் உபவாசம் உத்தமம்; நீரேனும் பாலேனும் உண்பது மத்திமம்; பழம் உண்பது அதமம்; தோசை முதலிய பணிகாரம் உண்பது அதமாதமம். (சிரவணம் - கேட்டல்)

சிவராத்திரி தினத்திலே இராத்திரியிற் பதினான்கு நாழிகைக்குமேல் ஒரு முகூர்த்தம் இலிங்கோற்பவ காலம். நான்கு யாமமும் நித்திரையொழிக்க இயலாதவர், இலிங்கோற்பவ காலம் நீங்கும் வரையுமாயினும் நித்திரை யொழித்தல் வேண்டும்; இக் காலத்திலே சிவதரிசனஞ் செய்வது உத்தமோத்தம புண்ணியம்.

இங்ஙனம் இராக் காலத்தைக் கழித்து அதிகாலையில் நித்திய கடன்கள் முடித்து ஆலயவழிபாடு செய்து எட்டு நாழிகைக்கு முன் சிவனடியாரோடும் சுற்றத்தாரோடும் பாரணஞ் செய்தல் வேண்டும். பாரணஞ் செய்த அத்தினத்தில் சிவபுராண சிரவண முதலிய சற்கருமங்களைச் செய்து கொண்டு பகலுறக்கமின்றியிருத்தல் வேண்டும். அன்று பகலில் உறங்குவோர் ஆரண மறையோர் தம்முள் ஆயிரம் பேரை யாதுங் காரணமின்றிக் கொன்ற கடும்பழியடைவரென நூல்கள் கூறும்.

## பூசை விதானம்

சிவராத்திரி விரதமனுட்டிப்போர் முதற்றினம் ஒருபோதுண்டு, மனந் தூயராய்த் துயின்று விடியற் காலத்தில் எழுந்து நித்திய கருமம் முடித்துச் சிவாலயத்துக்குச் சென்று சிவபிரானை வழிபட்டு அவ்விடம் விட்டு நீங்கி ஈன சாதியாருடன் பேசாமலும், அவர்களைப் பாராமலும் வீடு சென்று உச்சிக் காலத்தில் ஸ்நானஞ் செய்து அனுட்டானம் முடித்து விதிப்படி நான்கு யாமத்தும் மெய்யன்போடு சிவபூசை செய்யக்கடவர். அவ்வாறு பூசை செய்யும்போது விசேஷமாக முதற் சாமத்திற் பஞ்சகௌவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத்தினாலும், இரண்டாஞ் சாமத்திற் பஞ்சாமிர்த்தினாலும், மூன்றாம் யாமத்தில் தேனாலும், நான்காம் யாமத்திற் கருப்பஞ்சாற்றினாலும் அபிடேகஞ் செய்ய வேண்டும். முதற் சாமத்திற் சந்தனக் குழம்பும், இரண்டாஞ் சாமத்தில் அகிற் குழம்பும், மூன்றாஞ் சாமத்திற் பச்சைக் கருப்பூரச் சுண்ணமும், நான்காம் யாமத்திற் குங்குமமுஞ் சாத்தல் வேண்டும். முதற் சாமத்தில் வில்வமேனுந் துளசியேனுந் தாமரை மலரேனும், இரண்டாஞ் சாமத்தில் தாமரை மலரேனும், துளசியேனும் மூன்றாஞ் சாமத்திற் சண்பக மலரேனும், வில்வமேனும் நான்காஞ் சாமத்தில் நத்தியாவர்த்த மலரேனும் வில்வமேனுஞ் சாத்தல் வேண்டும். வில்வம், நொச்சி, மாவிலிங்கை, முட்கிளுவை, விளா இவற்றின் பத்திரங்களை முக்கிளையாகக் கொய்து நான்கு யாமத்துஞ் சாத்தலாம். முதற் சாமத்தில் முற்கான்னமும், (முற்கம் - பயறு) இரண்டாஞ் சாமத்திற் பாயசான்னமும், மூன்றாம் யாமத்தில் திலான்னமும், (திலம் - எள்ளு) நான்காம் யாமத்திற் சுத்தான்னமும் நிவேதித்தல் வேண்டும். நான்கு யாமத்திலும் சுத்தான்னமும் நிவேதிக்கலாம். பின்னர்த் தூபதீபங் காட்டி வில்வம், நொச்சி, மாவிலிங்கை, முட்கிளுவை, விளா முதலியவற்றின் பத்திரங்களால் அருச்சித்துப் பலவாறு தோத்திரஞ் செய்து பிரதக்ஷிண நமஸ்காரம் முதலிய செய்து, சந்நிதினயினின்று ''எம்பெருமானே! சிறியேன் செய்த இப்பூசையை யேற்றுக் கிருபா நோக்கஞ் செய்தருளல் வேண்டும்'' எனப் பிரார்த்திக்க வேண்டும்.

## கன்மாடபாதன்:

திருமால் காத்தற்றொழிலைச் செய்வதும், பிரமா சிருட்டித் தொழிலைச் செய்வதும், இந்திரன் விண்ணுலகத்தையாளுவதும், குபேரன் சகல சம்பத்துடன் கூடியிருப்பதும் இச்சிவராத்திரி விரதத்தை அனுட்டித்தமையினால் அடைந்த பேறாகும். பூர்வத்தில் அயோத்தியையாண்ட மித்திரசகன் என்னும் வேந்தன் வேட்டையாடும்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டிற்குச் சென்ற சமயத்தில், சகோதரராகிய இரு இராக்கதர் அந்த அரசன் முன்தோன்றி அவனுடன் எதிர்த்துப் போர் புரிதலும், வேந்தன் மூத்தோனைத் தன் வடிவாள்கொண்டு தடிந்தான். அதுகண்ட இளையவன் அந்த வேந்தனை அமர் புரிந்து கொல்வது அசாத்தியமெனக் கண்டு வஞ்சனையால் வெல்லக் கருதி, மானுடவுருக்கொண்டு, மன்னவன் முன்வந்து மலரடி பணிந்து, 'வேந்தே, யான் உன் குற்றேவல் செய்ய விருப்பங் கொண்டேன்'' எனலும், வஞ்சனையெண்ணாத வேந்தன் அவனைத் தன் மாளிகைக்கு அழைத்துச் சென்று சுபம்பாகியாக நியமித்தான்.

இங்ஙனமாக, ஒருதினம் வசிட்டர் ஆங்கு வருதலும், அரசன் அவரைத் திருவமுது செய்விக்க நினைந்து அமுதிடும்படி தனது சமையற்காரனாகிய அந்த இராக்கதனுக்குக் கற்பித்தலும், சமையம் பார்த்திருந்த அவ்வரக்கன் நரமாமிசம் சமைத்து வசிட்டர் முன்னிலையிற் கொண்டுவந்து வைத்தலும், வசிட்டர் அடங்காச்சீற்றமுற்று, ''அரசனே, எனக்கு நரமாமிசம் அருத்த முயன்றமையால் நீ அரக்கனாகுதி'' எனச் சாபமிட, வஞ்சனையொன்று மறியாத மன்னன், 'ஒரு குற்றமுஞ் செய்யாத என்னை இங்ஙனம் நீர் சபித்தமையினால், யானும் உமக்குப் பிரதி சாபமிடுகின்றேன்'' என்று தன் கரத்தில் நீரைப்பெய்து சாபமிட முயலுதலும், அது கண்ட அவன்றேவியாகிய மதயந்தி நாயகன் பாதங்களை வணங்கி ''பிராணநாதா, குலகுருவிற்குப் பிரதிசாபமிட்ட மன்னருங் குவலயத்திலுண்டோ'' என்று சொல்லித் தடுக்க, வேந்தன் தன்னுடைய கோபந்தணியப்பெற்று, கரத்திலிருந்த நீரைத்தன்காலிற் சிந்துதலும், காலில் நீர் பட்ட இடம் கருநிறமெய்த, சன்மாடபாதன் என்னுங் காரணப்பெயரைப்பெற்றான். (மாடம் - உழுந்து; உழுந்து போன்ற கரிய கால்களையுடையவன் என்றபடி.) வசிட்டரும் இது அரக்கன் வஞ்சனையென அறிந்து, ''பன்னிரண்டாண்டு செல்ல நின் சாபம் நீங்கு'' மெனக் கூறிச்சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்மாடபாதன் இராக்கதனாகிக் கானகமடைந்து அங்குள்ள விலங்குகளையெல்லாம் பிடித்துத்தின்று வரு நாளில், மணமுடித்துச் சில நாட்கள் மாத்திரஞ் சென்ற ஒரு மறையவனும் அவன்றேவியும் அக்காட்டு மார்க்கமாக வரக்கண்ட கன்மாடபாதன் அந்தணனையுண்ண நினைந்து அவனைப்பிடிக்க, அது கண்ட பார்ப்பனி அலறி ஏங்கி, "அரக்கனே, என் பிராணநாதரைக் கொல்லாதே, நீ உண்மையில் இராக்கதனல்லை, வசிட்ட முனிவன் சாபத்தால் இவ்வடிவமெடுத்து அலைகிறாய்; என் நாயகரைக் கொல்லுவையாயின் யானும் உன் முன்னிலையிலே தீமூட்டி அதில் வீழ்ந்து என் உயிர் விடுவேன்" என்று சொல்லவும், அரக்கனான அரசன் அப்பார்ப்பனியின் வார்த்தையைக் கேளாதவனாய் மறையவனைக்கொன்று தின்று என்புகளை அவள் முன்னர் உமிழ்ந்தான். பார்ப்பன மங்கை தன்னாயகனுடைய என்புகளையெடுத்துச் சேர்த்துத் தீமூட்டி அத்தீயில் தானும் வீழ்ந்து உயிர் விட்டாள். அவள் அக்கினியிற் பிரவேசிக்கும் போது 'அரக்கனே, நீ என்னாயகனைக் கொன்றனையாதலின், சாபவிமோசனமாகி உன் நாட்டிற்குச் சென்று உன் மனைவியைக் கூடுங்காலத்தில் உயிர்துறப்பாய்" என்று சபித்தாள். பன்னீராண்டு சென்ற பின் கன்மாடபாதன், முன் வசிட்டர் இட்டதாகிய சாபம் நீங்கப் பெற்று அயோத்தியை அடைதலும், அங்கு அவன் மனைவியாகிய மதயந்தி, பிராமணப்பெண் இட்ட சாபத்தை நினைப்பூட்ட, அவன் பெரிதும் மனங்கலங்கி, இராச்சியத்தை வெறுத்துத் துறவியாகித் தீர்த்த யாத்திரை செய்யப் புறப்பட்டான்.

இவ்வாறாக, இவ்வரசன் பிராமணனைக்கொன்றவனாதலின், பிரமகத்தி செம்மயிர்ப்பங்கியும் வக்கிர தந்தமும் நீண்ட மூக்கும் அச்சந்தரும் நோக்குமான ஒரு பெண் பேய்போல் உருக்கொண்டு கன்மாடபாதனைத் தொடர்ந்து வருத்தத் தலைப்பட்டது. அவன் பல புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கியும் பல புண்ணிய ஸ்தலங்களைத் தரிசித்தும் தன்னைப்பிடித்த பிரமகத்தி நீங்காமையினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணந்தளர்ந்து மிதிலாபுரிக்கு அயலிலேயுள்ள ஓரிடத்தி லிருந்தான்.

அங்ஙனமிருக்குங் காலத்தில் ஒருதினம் கௌதம முனிவர் ஆங்கு வருதலும், அரசன் அவரடி பணிந்து தனக்கு நேர்ந்த இன்னலை விண்ணப்பஞ்செய்ய, முனிவர் மனமிரங்கி ''திருக்கோகர்ணம் என்னும் திவ்விய ஸ்தலத் தையடைந்து சிவராத்திரியை விதிப்படி அநுட்டிப்பை யாயின் நின்னை வருத்தும் இன்னல் அனைத்தும் நீங்க, நீ தொன்மைபோல் மன்னனாய் இனிது வாழ்வாய்'' என்றார். கன்மாடபாதனும் அங்ஙனஞ் சிவராத்திரி விரதத்தை விதிப்படி அநுட்டித்துத் தன்னைப் பிடித்த பிரமகத்தி நீங்கப்பெற்று, தனது நாட்டையடைந்து, அரசனாகி இனிது வாழ்ந்து பின் கைலையை அடைந் தான்.

புத்திபூர்வமாயன்றி அபுத்திபூர்வமாக இவ்விரதத்தை அநுட்டிப்போரும் தங்கள் பாவங்கள் நீங்கப்பெறுவர்:

## அங்குலன்

சாகரபுரத்தின் அயலிலேயுள்ள ஓர் ஆரணியத்தில் அங்குலன் என்னும் பெயருடைய வேடனொருவன் இருந் தான். அவன் அக்காட்டிலுள்ள மான், மரை, முயல் முதலிய விலங்குகளை வரைவின்றிக் கொன்று புசித்துத் தன் மனைவி மக்களுடன் வாழுநாளில், மாசிமாசத்துச் சிவராத்திரியன்று பகல் அம்பு, வில், கண்ணி என்னு மிவைகளையெடுத்துக்கொண்டு மிருகங்களைக் கொல்லும் நோக்கமாகக் காட்டிற்குப் புறப்பட்டான். அப்பகல் முழு வதும் மிருகமேனும் பட்சியேனுந் தனக்கு அகப்படாமை யினால், அங்குலன் மனம் வருந்தி, வெறுங் கையின னாய்த் தன் மனைவி மக்களிடம் மீண்டுசெல்ல மனம் பொருந்தாது பெரும்பசி வருத்த அக்காட்டிற்றானே எங்கும் அலைந்தான். இராக்காலஞ் சமீபித்தலும் அவன் ஒரு குளத்திற்கருகேயுள்ள வில்வமரத்தில் ஏறி, தண்ணீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிக்கும்படி ஆங்கு வரும் மிருகங்களைப் பதிவிருந்து கொல்லலாம் என்னும் நோக்கத்துடன் அதன்மிசை இருந்தான். அங்ஙனமிருந்த அவ்வேடன் வில்வ மரத்துள்ள பத்திரம் தன் அம்பின் செலவைத் தடுக்குமென அஞ்சி, அப் பத்திரங்களைக் கொய்து கீழே இட்டுக் கொண்டிருந்தான். அவன் இட்ட வில்வபத்திரமனைத்தும் மரத்தின் அடியிலிருந்த ஒரு புராதன சிவலிங்கப் பெருமான்மீது வீழ்ந்தன; அந்த இரவு முழுவதும் தனக்கு ஒன்றும் அகப்படாமையினால் வேடன் பெரிதும் மனம் நொந்து மரத்தை விட்டிறங்கி, தன் மனைவி மக்கள் தன்னைத் தேடி வருவாரென்னும் எண்ணத்தினால் விரைந்து தன் குடிசையை நாடிச் செல்லுதலும், தன்னாயகனை இரவு முழுவதுங் காணாது வருந்திய மனையாள் எதிரே வரக்கண்டு அவளுடன் குடிசைக்கு மீண்டு மனைவி மக்களுடன் தேனும் தினைமாவும் புசித்துப் பசியை நீக்கி இனிதிருந்தான். இவ்வேடன் கொலைப் பாதகத்தைச் செய்தானேனும் சிவராத்திரியில் ஊணுறக்கமின்றிச் சிவலிங்கப் பெருமான்மீது வில்வத்தையிட்ட புண்ணியத்தினாலே இறந்தபின் கயிலையை யடைந்தான்

## சௌமினி:

சௌமினி என்னும் ஒரு பிராமணப்பெண் தன்னாயகன் இறக்க, காமவிகாரத்தால் நிறை தவறிக் கட்குடித்து ஆன்கன் றட்டருந்தி கன்ம நோய் பிடிக்க வருந்தியிறந்து பின் புலைச்சேரியிற் பிறந்து, முன்செய்த கன்மத்தாற் கண்ணிழந்து குட்டஞ், சூலை முதலிய கொடு நோய்கள் வாட்டப் பசிவருத்தஞ் சகிக்க இயலாதவளாய்த் திருக்கோகர்ணம் என்னுஞ் சிவாலயத்தையடைந்து யாசிக்கும்பொழுது, அங்கு வந்த ஒரு விடன் சில வில்வ பத்திரத்தை "இதுதான் உனக்கு உணவு" என்று அவள் கரத்திற்போட, அதை அறிந்த அவள் அப்பத்திரங்களை யெறிய, அவை அச் சிவராத்திரி புண்ணிய காலத்திலே சமீபத்திலிருந்த ஒரு புராதன சிவலிங்கத்திற் பட, அதுவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவார்ச்சனை யானமையால் இறந்தபின் சிவபதமடைந்தாள்.

## விபரிசனன்

பூர்வத்தில் ஒரு நாய் ஒரு சிவாலயத்திற் பலியுணவு அருந்தச் சென்றபோது அதைக் கண்ட காவலர் அதை நாற்புறமுஞ் சூழ, அந் நாய் அச்சமுற்றுக் கோயிலை வலமாய் வந்து உய்யும்வழி காணாது பலிபீடத்துள் மறையும் போது திபாராதனை நிகழ, அது சிவராத்திரி காலத்திற் சிவபிரானைத் தரிசித்து இறந்தது. இந்த நாய் சிவராத்திரியிற் சிவபிரானைத் தரிசித்த புண்ணியத்தினால் அடுத்த பிறப்பில் விபரிசனன் என்னும் அரசனாகப் பிறந்தது. விபரிசனன் செங்கோல் செலுத்திச் சகல இன்பங்களையும் அனுபவித்துக்கொண்டு இனிது வாழ்ந்தான்.

## குபேரன்

குணநிதி என்னுமோர் வேதியன் வேதியர்க்குரிய முறைப்படியொழுகாது பரஸ்திரீகமனம், சூதாடல், கள்ளுண்டல் முதலிய பஞ்சமாபாதகங்களுட் பிரவேசித்து ஒரு தினம் பசி நோய் வாட்ட, ஓரந்தணன் பின்னர்ச் சென்று கோயிலுட் புகுந்து, திருவமுது கவர்ந்து செல்லும் பொருட்டாக நான்குயாமத்தும் நித்திரையின்றிச் சமயம் பார்த்திருக்க, வைகறையில் அவ்வந்தணன் தூங்க, குணநிதி அங்குள்ள திருவிளக்கைத் தூண்டிச் சந்நிதியிலிருந்த திருவமுதை எடுத்துக்கொண்டு செல்லும் பொழுது காவலராற் பிடித்துக் கொல்லப்பட்டான். சிவராத்திரி தினத்தில் நித்திரையின்றியிருந்தமையானும் திருவிளக்கைத் தூண்டினமையானும் மறுபிறப்பிற் குபேரனானான்.

## சுகுமாரன்

சிந்துநதி தீரத்திலே குஞ்சரபுரம் என்னும் ஒரு நகரமுளது. அந்நகரத்திலிருந்து இராச்சிய பரிபாலனஞ் செய்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குஞ்சகன் என்னும் அரசனுடைய புரோகிதனுக்குச் சுகுமாரன் என்னும் பெயரையுடைய புதல்வனொருவன் இருந்தான். இவன் மங்கையர் கண்கவரும் வனப்பு வாய்ந்தவன் பிராமண வருணத்திற் பிறந்தும் அச்சுகுமாரன் வேதம் ஓதுதல் முதலிய ஒழுக்கங்களை விடுத்து, தூர்த்தனாகிப் பெண்கள் கற்பைப் பங்கஞ்செய்து திரிவானாயினான். குஞ்சரபுரத்துள்ளோர் இச்சுகுமாரனுடைய படிற்றொழுக்கத்தைக் குறித்து அரசனுக்கு முறையிட, அரசன் பெருஞ் சீற்றங்கொண்டு, பிராமணனைக் கொல்லவொண்ணாதென மநுநீதி கூறுதலாற் கொல்லாது, தனது நாட்டைவிட்டு ஓடும்படி அச்சுகுமாரனுக்குக் கட்டளைசெய்தான். சுகுமாரன் பெரிதுஞ் சஞ்சலமுற்றவனாய், அரசன் ஆஞ்ஞையின்படி நாட்டைவிட் டகன்று கரடி, புலி, சிங்கம் முதலிய துஷ்ட மிருகங்கள் சஞ்சரிக்குங் காட்டையடைந்து அலைந்து திரியும் நாளில், ஒரு சோலையின் மத்தியிலே விளங்குந் தாமரைத்தடாக மொன்றைக் கண்டு அதன் கரையில் மர நீழலில் இருந்தான்.

அங்ஙனம் இருக்குஞ் சமயத்தில், புலையர் குலத்திற் பிறந்தவளும் பேரழகுடையவளுமாகிய ஒரு கன்னிகை அத்தடாகக்கரையை நோக்கி வருதலை அச்சுகுமாரன் கண்டு காதல்கொண்டு எழுந்து அவளையண்டி நின்று, குலங்கோத்திரமென்பன நோக்காதவனாய், "கண்ணே, என் காதலியே, யான் உன்னைக் கடிமணம் புரியக் கருத்துக்கொண்டேன்" என்று அவளை இரந்து நின்றான். புலைச்சியாகிய அக்கன்னிகையும் அதற்குச் சம்மதித்தனள். இருவரும் புலைச்சேரியிற் சென்று வாழுங்காலத்திலே, அப்புலைச்சி பஞ்சமாபாதகங்கள் என்று சொல்லும் படி ஐந்து புத்திரர்களையும் இரு புத்திரிகளையும் ஈன்றாள். அச்சுகுமாரன் அம்பு, வில்லு, வாள் என்னும் படைகளையெடுத்துக்கொண்டு, புலைச்சி வயிற்றிற்பிறந்த தன் புதல்வருடன் காட்டகஞ்சென்று மான், மரை, முயல் முதலாம் மிருகங்களையும், புறவு முதலாம் பறவைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் வதைத்து உண்டும், கட்குடித்தும் இன்னுஞ் செய்யத்தகாத பாதகங்களெவைகளோ அவைகளையெல்லாஞ் செய்து கொண்டு திரியுநாளில், அப் புலைமடந்தை பெரும் பிணிவாய்ப்பட்டு இறந்தாள். சுகுமாரன் அவள் பிரிவாற்றாதவனாய்ப் பெரிதும் வருந்திப் பின்னர் ஒருவாறு தேறித் தன் புதல்வியருடன் கூடியிருந்தான்.

இங்ஙனமாக, ஒரு சூரிய கிரகண புண்ணிய காலத்தில் அரசனொருவன் தானமாகக் கொடுத்த பொருள்களைப் கொண்டு சில பிராமணர் ஒரு வனாந்தர மார்க்கமாகச் செல்லுஞ் சமயத்தில், சுகுமாரன் தன் புதல்வர்களுடன் சென்று அப்பிராமணர்களை வழிமறித்து அடித்து அவர்கள் கொண்டு சென்ற தானப்பொருளையும் பறித்து மீண்டான். இச்செய்தியை அந்தணர் அரசனுக்கு முறையிட, அவன் அடங்காச் சீற்றமுற்றுச் சுகுமாரனைப் பிடித்துவரும்படி தன் ஏவலரைப் பணிக்க, அவர்கள் காற்றென விரைந்து சென்று காடும் மேடும் வனாந்தரமும் அவனைத் தேடித் திரிவாராயினர். அவர்கள் வரவை யொருவாறு உணர்ந்த சுகுமாரன், தான் வசித்த அக் காட்டை விட்டகன்று தன் புத்திரருடன் திருநாகேச்சுவரம் என்னுந்தலத்திற் கணித்தாகவுள்ள ஒரு வனத்திலே சஞ்சரித்தான்.

ஒரு சிவராத்திரியன்று சனங்கள் எல்லாரும் நாகேச்சுவரரைத் தரிசிக்கச் செல்லுஞ் சமயத்தில், அத்தினம் சிவராத்திரி புண்ணிய காலமென்பதைச் சிறிதும் அறியாத சுகுமாரன், தன் புதல்வியருக்குக் கூந்தலில் வைத்து முடிக்கும்படி பூத்தேடி, நாகேச்சுவரர் கோயிற் பூங்காவை யடைந்து, சமயம் பார்த்துக்கொண்டு ஒளித்திருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சிவராத்திரியிற் பதினைந்து நாழிகைக்கு மேல் இலிங் கோற்பவ காலத்தில் நாகேச்சுவரர் அடியாருக்குக் காட்சி கொடுத்தருளும் சமயத்தில் அச்சுகுமாரனும் பூர்வபுண்ணி யத் தொடர்பினால் எம்பெருமானைத்தரிசித்து மீண் டான். அவன் பின்னரும் சிலகாலம் வாழ்ந்து பெருமூப் படைந்து பெருவியாதியாற் பீடிக்கப்பட்டு ஈற்றில் பஞ்ச மாபாதகம் இறந்ததென்று சொல்லும்படி இறந்தான். கூற்றுவன்றூதர் அவனது உயிரைக் கவர்ந்துகொண்டு தென்றிசை நோக்கிச் செல்லும் சமயத்தில், சிவகணங் கள் அவர்களை விலக்கித்தாமே சுகுமாரனுடைய உயி ரைக் கவர்ந்து சென்று சிவலோகத்தில் உய்த்தார்கள். காலதூதர் இச்செய்தியை யமனுக்குச் சொல்லுதலும், அவன் எருமைக்கடாவில் ஏறிக்கொண்டு கைலாயகிரியை யடைந்து திருநந்திதேவர் அனுமதி பெற்று உள்ளே சென்று சிவபிரானைப் பன்முறை வணங்கிச் சிவகணத் தோர் செயலைக் கூற, செழுமதி மிலைச்சிய முழுமுதற் கடவுள் புன்முறுவல்பூத்து, ''அந்தகனே, அச்சுகுமாரன் சிவராத்திரியில் இலிங்கோற்பவ புண்ணியகாலத்தில் எம் மைத் தரிசிக்க யாம் அவனுக்கு அருணோக்கம் செய் தோம்; அதனால் அவன் செய்த பஞ்சமாபாதகமனைத் தும் தீயிடைப்பட்ட பஞ்சுபோல நாசமாயின; அக்கார ணத்தால் அவன் இச்சிவ பதவியையடைந்தான்; எமது விரதத்தைப் புத்திபூர்வமாயேனும் அபுத்திபூர்வமாயேனும் அநுட்டித்தோரை இனி நீ ஒருபோதும் அணுகாதொழிதி'' என்று திருவாய்மலர்ந்தருளினார். கூற்றுவனும் பசுபதி யின் இரு பாதாரவிந்தங்களைப் பணிந்து தன் பதவியை யடைந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாலிகோத்திரன்:

சாலிகோத்திரன் என்னும் ஒரு வேதியன், தாங்கொணா வறுமையையடைந்து செய்வதின்னதென அறியாது தியங்கி, அகத்தி முனிவரிடம் சென்று வணங்கி, "முனிவர் பெருமானே, என் மனைவி மக்களைப் பாதுகாத்தற்கு வகையின்றி வருந்துகின்றேன்; என்னை வருத்தும் வறுமையோ மிகக் கொடியது; இக்கொடிய வறுமைநோய் களைதற்குத் தேவரீரே எனக்கு ஒரு உபாயஞ் சூழ்ந்தருளுதல் வேண்டும்" என்று இரந்தான். கும்பமுனி குறுமுறுவல் செய்து, 'அந்தணனே, நீ சிவராத்திரி விரதத்தை விதிப்படி பத்திபூர்வமாக அநுட்டிப்பையாயின் உன்னை வருத்தும் கலி ஆதவனைக் கண்ட பனியென அகலும்; அச்சிவராத்திரியை அநுட்டித்தற்குச் சிறந்த தலம் வேதாரணியமாகும்; ஆங்குச் சென்று அவ்விரதத்தை அநுட்டிப்பாய்" என்று சொல்ல, அச்சாலிகோத்திரன் அம்முனிவரடி வணங்கி, விடைபெற்றுச் சென்று வேதாரணியத்தையடைந்து சிவராத்திரி விரதத்தை விதிப்படி அநுட்டித்துக் குபேரசம்பத்தையுடையவனாய் மனைவி மக்களுடன் இனிது வாழ்ந்து இறந்தபின் கயிலையையடைந்து அரன்றிருவடி நீழலெய்தினன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*விரத காலத்தில் ஓதற்பாலனவாகிய*

# தோத்திரப் பாக்கள்

## விநாயகர்

ஓங்குமொரு மருப்பானை யுயிர்க்குயிரா
    யிருப்பானை யுரக வேந்தன்
றாங்குநெடு நிலத்தானை முகத்தானை
    வதைத்தானைச் சயில மானைப்
பாங்குவைத்து மழுத்தானை பரிதான்றந்
    தளித்தானைப் பசும்பொற் றோட்டுப்
பூங்கமல பதத்தானைப் பொருவிலைந்து
    கரத்தானைப் போற்றல் செய்வாம். 1.

## நடராஜர்

சீர்தந்த கமலமலர்த் திசைமுகனுந்
    திருமாலுந் தேவர் கோவுங்
கூர்தந்த நகப்புலிக்காற் றவமுனியும்
    பதஞ்சலியுங் குழைந்து போற்ற
வார்தந்த கலசமுலை மலைவனிதை
    விழிகளிப்ப மன்று ளாடுங்
கார்தந்த மணிமிடற்றுக் கடவுடிரு
    வடியிணைகள் கருத்துள் வைப்பாம்.

## சிவகாமியம்மை.

கடிகமழ்கட் கமலமலர்க் கட்டிகிரிக்
    கரனொருகூ கரம தாகிப்
படியிடந்து மறிவரிய பதப்பவள
    மலைமருங்கிற் படரும் பச்சைக்
கொடிகொடிய பவக்கடலிற் குளித்தழுந்தா
    தின்பழுத்தி கூடும் வண்ணம்
அடியவருக் கருள்புரியுஞ் சிவகாமி
    யம்மைபதத் தன்பு கூர்வாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுப்பிரமணியர்

இரங்குன்றன் றஞ்சநமக் கென்றுமக
வான்முதலோ ரிரப்ப நீண்ட
கரங்குன்றம் படைத்தவனைய கரிமுகத்தோ
னரிமுகத்தோன் கதங்கொள் சூரன்
வரங்குன்ற மயிலுகைத் தங் கயிலெடுத்த
மலர்க்கரத்தோன் மஞ்சு துஞ்சும்
பரங்குன்றத் திருந்தசெவ்வே ளடிக்கடிச்செம்
பதுமமலர் பணிதல் செய்வாம். 4.

ஈரலைவா யசங்கவரப் பிணங்கிடக்கும்
கனத்தமர்நீத் தெய்தி நொய்தின்
வாரலைவா யுறுமொருமா வரையோரொன்
றோரிரண்டா வகிர்ந்த வேலோன்
வேரலைவா யழிக்குமென்றோட் கவின்படைத்த
வள்ளிசுர வேழத் தோடு
சீரலைவாய் வருமடிக ளடியரடிப்
பொடிமுடியிற் சேர்த்தல் செய்வாம். 5.

பொருவினறு மலர்போதுளுந் தண்டலைசூழ்
கதிரைநகர்ப் புனிதன் பாதம்
உருகியுளத் தழுத்திவினை நீறழுத்து
மாறெழுத்து முணர்ந்து நாவின்
முருகசர வணபவசண் முகருகவெண்
றனுதினமு மொழிவோர் தங்கண்
மருமருவு கமலமல ரடிமுடியின்
மீதுவைத்து வணங்கல் செய்வாம். 6.

## திருநந்திதேவர்

செய்யதழற் புரிசடையுந் திருநுதலிற்
றனிவிழியுந் திண்டோ ணான்குங்
கையதனிற் சுரிகைமழுப் பிரம்புசுவை
யடிச்சிறுமான் கன்றுந் தாங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையமுத லனைத்துலகுந் தொழுங்கயிலை
மலைகாக்க மதியஞ் சூடு
மையனருள் பெற்றநந்தி யடிக்கமல
முடிக்கமல மாக வைப்பாம். 7.

## சரஸ்வதி

காரதிருங் கயிலைமலை கண்ணுதன்முப்
புரமெரிக்கக் கருது மந்நாள்
நீரதிகந் தருந்தரங்கத் தடங்கடல்சூழ்ந்
திடும்புடவி நெடுந்தே ரூர்ந்த
சாரதிதன் றிருநாவி லடியருளத்
தினிலிருக்குந் தவள மேனிப்
பாரதிசெம் பதப்பதுமத் துணைப்போது
முப்போதும் பரவல் செய்வாம். 8.

## சண்டேசுர நாயனார்

நீளிரண்டு கரத்தெடுத்த நிறைகுடப்பான்
முதற்புனித நீரி லாட்டி
வாளிரண்டு நிகர்த்தவிழி மலைமகள்கேள்
வனைவழுத்தி மலர்கள் சாத்தி
யாளிரண்டு பதமளித்தென் றருச்சிக்கு
மமையமதி லவஞ்செய் தந்தை
தாளிரண்டு மறவெறிந்த சண்டீசர்
முண்டகப்பொற் றாளிற் றாழ்வாம். 9.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

வெங்குருவிற் கவுணியர்தங் குலத்துதித்து
மீனவன்றன் வெப்புங் கூனு
மெங்குமிசை பெறமாற்றி யமணரெண்ணா
யிரர்கழுவி னிறக்க வேற்றிப்
பங்கமிலென் பரிவையுருப் படைத்துயிர்பெற்
றெழப்பதிகம் பாடி மேன்மை
தங்குமறைத் திருஞான சம்பந்தன்
றாட்டுணைகள் தலைமேற் கொள்வாம். 10.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுந்தரமூர்த்தி நாயனார்

மங்குனிறத் திருநெடுமால் வளையெயிற்றுப்
பெருங்கேழல் வடிவந் தாங்கி
யங்கணில முழுது முழு தறிவரிய
கமலமல ரடிகள் சேப்பச்
சங்கணிகைக் குதலைமொழிச் சரவைவிழிப்
பரவையென்பா டன்பா லன்பாற்
பொங்கிருளியிற் சந்தரனை நடப்பித்த
சுந்தரனைப் போற்றல் செய்வாம். 11.

## திருநாவுக்கரசு நாயனார்

காவரசு மலரயன்மால் கடவுளர்க்காச்
சென்றமர்செய் காமனா மைம்
பூவரசு படவிழித்துப் புனவேங்கை
யத்தியதழ் புனைந்து போர்த்த
தேவரசு மனமகிழத் திருப்பதிக
மிசைத்தமிழிற் சிறக்கப் பாடு
நாவரசு பதம்பரசு நமக்குயர்பொன்
னாட்டரசு நல்கு மன்றே. 12.

## மாணிக்கவாசக சுவாமிகள்

பெருவாத பித்தகபப் பிணிக்குடையு
முடற்சுமக்கும் பிறந்தை நீக்கி
யொருவாத சிவகதியி னுரிமைபெற
நறவமல ருமிழுஞ் சோலை
மருவாத மளைந்துலவு மன்றுடையாற்
குக்கோவை மாலை சாத்துந்
திருவாத வூரடிக ளடிகள் பாடி
யுறவணங்கிச் சென்னி சேர்ப்பாம். 13.

## சிவனடியார்

பொய்விரவு பலநீறு படப்புரிவெண்
டிருநீறு பூசிக் கண்டி
கைவிரவு மணியினரா யஞ்செழுத்து
முணர்ந்துமனக் களங்க நீங்கி
மெய்விரவு மறைவரம்பி னிலைகடவா
தொழுகியருண் மேன்மை பூண்ட
மைவிரவு கண்டர்தொண்டர் மலரடிகள்
சிரத்திருத்தி வழுத்தல் செய்வாம். 14.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதி பதிப்பகம்,
430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல; 021 - 3081

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org